# விடிவெள்ளி



நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசியார்
50வது ஆண்டு அமரத்துவ நினைவாக

468.P

920

# விடி வெள்ளி

நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசியார்
வாழ்க்கைக் குறிப்பு

பொது சன நூலகம்
13 FEB 1997
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

சூ. யாக்கோபு

ஞான வெளியீடு — 2
1997

## என் இதயத்துடிப்பு

சூரியக்கதிரின் சுள்ளிடும் சூட்டுக்கஞ்சிப்
பதைக்கத் துடி துடிக்கப்
பல தூரம் சென்று
உடல் உளம் உருகி உலர்ந்த வேளை!
இதயத்தின் துடிப்பு
இயல்பு நிலைக்குமேல் இயங்கிடச்
சோர்வுற்று சோர்ந்து அயர்ந்தவேளை!
கனவுலகில்! உள்ளத்தில்
அலை அலையாக
எழுந்த எண்ணங்கள்
வடித்த உருவம் ஒன்று
பார்த்ததும் கண்கள் பனித்தன.
இதயம் மீண்டும் பட படத்தது.
உயர்ந்த தோற்றம்
ஞானியின் ஒளி பொருந்திய கண்கள்
தாடியுள்ள வசீகர முகம்
ஆ! அதற்கிடையில் 50 ஆண்டுகள்
ஆகிவிட்டனவா!!
கண்ணீர் மல்க
கரங்கள் குவித்து
நா! தட்டுத்தடுமாறி

சொத்துச் சுகத்தைச்
சுந்தர ஜோதிக்காக துறந்த பெரிய சுவாமியாரே!
அப்பாவி மக்களின்
அடிமைச் சங்கிலியை
அன்பரசன் கிறிஸ்துவின்
சிலுவை வழியில் உடைத்த உத்தமரே!
தீண்டாத மக்களின்
அறியாமை போக்க அருளாலயங்கள்
அறிவாலயங்கள் அளித்த அன்பனே!
அன்பு மொழி, அமுது மொழி, பக்திமொழி
நம் அன்னை மொழியை
உலகெங்கும் அறியச்செய்த செம்மலே
எம் மக்களின் விடி வெள்ளியே
மீண்டும் எம் மண்ணுக்கு நாம் சென்றிட
எல்லாம் வல்ல இறைவனை
வேண்டும் தந்தையே, என்று
வேண்டிக்கொண்டேன்
கனவில் இதயத்தில் விழுந்த விதை. இன்று
விடி வெள்ளியாக
உங்கள் கரம் தந்தேன்.
என் இதயத்துடிப்பும் இயல்பாகியது.
மனம் பாரமும் குறைந்தது.
இறைவா உமக்கு நன்றி.

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

அன்பன்
சூ. யாக்கோபு

# வரவு 1

## மானிப்பாய் மல்லிகை

யாழ் மண்ணில் 30-8-1875இல் மானிப்பாயில் மலர்ந்த மல்லிகைக்குப் பெற்றோர் இட்ட பெயர் வைத்திலிங்கம் என்பதாகும். தந்தை தன் மகனைக் கனகரெத்தினம் என செல்லமாக அழைப்பார். செக்கச்சிவந்த செம்மலரின் தந்தையின் பெயர் இராசலிங்கம் சாமிநாதப்பிள்ளை தாயின் பெயர்: தங்கமுத்து. சைவத்தில் ஊறிய பெருங்குடி மக்களின் மழலை தவழ்ந்து விளையாடியது.

தன்மகனை எப்படி வளர்க்கலாம்? என்ன பதவியில் வைக்கலாம்? என்று தந்தை எண்ணக்கோட்டை கட்டினார். சாதி, சமயம், செல்வம், செல்வாக்குப் பாராது சாமிநாதரைப் பிடித்த நோய் அவரை மறு உலகுக்கு அனுப்பியது. மழலைக்கு அப்போது ஒருவயதுகூட ஆகவில்லை. இறை திட்டம் அறிவார் இங்குயார் உளர்?

## ஞானதீட்சை

அன்னையின் அரவணைப்பில் மழலை வளர்ந்தது அழகும் அறிவும் செல்வச் செழிப்பும் நிறைந்த தங்கமுத்து துன்பவேளை வேதாகமத்தை எடுத்து வாசித்தார். யோபுவின் வரலாறு அவர் கண்களில் நீரைத் தேக்கியது. இதயத்தை ஊடுருவியது. அப்போது ...

''கடவுளே! என் குழந்தை இந்தப் பேராபத்தான வருத்தத்திலிருந்து தவறுமானால் உமது சேவைக்கே இந்தப்பாலனை அர்ப்பணம் செய்கிறேன். உமது திருவேதத்தைப் பரப்பும் ஒரு போதகராக இவனை ஏற்றுக்கொள்ளும்,'' என்று இறைவனிடம் உறுதிமொழி கொடுத்தார். இறைவழிகாட்டல் இயக்கம் பெற்றது. அச்சுவேலியைச் சேர்ந்த பத்திராதிபர் தம்பிமுத்து. ஞான தீட்சை பெற்ற அன்னமுத்துவாகிய தங்கமுத்துவை திருமணம் புரிந்தார்' அன்னமுத்துவின் அன்புச் செல்வமும் ஞானதீட்சை பெற்று ஞானப்பிரகாசமாகியது. தாய்க்கும் சேய்க்கும் ஞானதீட்சை அளித்த வண பீற்றர் அடிகள் ''வேளாண்மையோடு வயலையும் வாங்கிவிட்டேன்,'' என மனம் மகிழ்ந்தார்.

## கல்விக்களம்

அன்பு மகனுக்கு அன்னையும் அப்புவும் கல்விக்குரிய ஆரம்பகள நெறியாளர்களாகத் திகழ்ந்தனர். அடுத்து அச்சுவேலி புனித சூசையப்பர் ஆரம்பப் பள்ளியும், பின் மானிப்பாய் மெமோறியல் கல்லூரியும் சிறுவனின் கல்விக் களங்களாக அமைந்தன. எட்டு வயதைத் தொட்டபோது ''அப்பு'' யார் என்பதைச் சிறுவன் தாயார் மூலம் அறிந்து வேதனை கொண்டான். அன்புச் செல்வத்தின் வேதனையை ''அப்பு'' தன் அரவணைப்பால் அகற்றி விட்டார் ''அப்பு''வின் ஆளுமை அருமைச் செல்வத்தில் ஊறி, அவனை உயர்ந்தவனாக்கியது. அறிவுக்களஞ்சியமான சம்பத்திரிசியார் கல்லூரியில் தமிழ், ஆங்கிலம், சமயம் மூன்றையும் கசடக்கற்றார். பல பரிசில்களையும் வென்றார். இக்கல்லூரியில் உயர்கல்விகற்கும் போது நாடகத்துறையில் நாட்டம் கொண்டார். ஆடல், பாடல்களில் நளினம் பெற்றார். இக்காலப்பொழுதில் புகையிரதப் பகுதிப் பரீட்சையில் சித்தி பெற்று, உத்தியோகம் பார்த்தார்.

## உள்ளொளி பிறந்தது

கடுகண்ணாவையில் வசீகரம் மிக்க இளைஞன் ஞானப்பிரகாசம் பணிபுரிந்தார். அவரின் பணியின் பக்குவத்தையறிந்து, அவருக்கு உத்தியோக உயர்வு கொடுத்தார், தலைநகர் கொழும்பு சென்று பணியாற்றிய போது உள்ளத்தின் ஆழத்தில் ஓர் ஒளிபிறந்தது அங்கு இறை பிரசன்னத்தை அவரால் உணரமுடிந்தது. அதனால் உத்தியோகத்தை உதறினார். உத்தம பெற்றோரின் உள்ள நோவையும் உதறிவிட்டு உயர் தலைவன் யேசுவின் சத்திய வழியில் நித்தியப் பணியாற்ற புனித மாட்டினார் குரு மடத்திற் சேர்ந்தார். அன்னையும் தன் உறுதிமொழியை நினைவு கூர்ந்து கர்த்தரின் பாதையைக்கண்டு களிகூர்ந்தார். 'அப்பு'வையும் சாந்தப்படுத்தினார்.

## அமலோற்பவ இராக்கினியின் தூதன்

குருமாணவன் ஞானத்தின் எழுத்தாற்றலும், பேச்சாற்றலும் குருமடத்தில் மலர்ந்து மணம் வீசத் தொடங்கின. பேராயரின் அனுமதியோடு "அமலோற்பவ இராக்கினியின் தூதன்" என்ற திங்கள் இதழைத் தொடங்கினார். அவரின் "எல்லாத் தலைமுறைகளிலும் என்னைப் பாக்கியவதி என்பார்கள்" என்ற மகுடம் பூண்ட இராக்கினியின் தூதன் கத்தோலிக்கப் பூங்காவில் நறுமணம் வீசியது. இம்மலரின் மணல் கடல் கடந்து பாரதம் வரை வீசியது. ஆறு ஆண்டுகள் குருமடத்தில் பயிற்சி பெற்று 1-12-1901 இல் குருப்பட்டம் என்னும் திருப்பட்டத்தைப் பெற்று அ. ம. தியின் குருவானார்.

# பணிவாழ்வு 2

## பணித்தளங்கள்

### 1) *பாண்டியன் தாழ்வு*

யாழ் பேராலயத்தில் அடிகளார் தம் இறைபணியை ஆரம்பித்தார். இங்கிருந்து கொண்டே பாண்டியன் தாழ்வுக்கு அடிகளார் சென்று போதிப்பார். இன்று புனித அன்னம்மாள் ஆலயம் இருக்கும் இடம் வெற்றிடமாக இருந்தது. இவ்விடத்தில் சிலுவையின் மறையுண்மைகளை மக்களின் மனமுருகப் போதிப்பார். அடிகளின் போதனையும் சாதனையும் இரண்டறக்கலந்து மக்களின் மனங்களை மாற்றின. இறையரசுக்கு இறைமக்கள் வந்தனர். புனித அன்னம்மாள் பெயரால் தன் முதல் ஆலயத்தை உருவாக்கினார்.

### 2) *ஊர்காவற்றுறை*

இப்பங்கில் ஊழியம் செய்த போது ஊர்மக்களின் உள்ளத்தில் நற்கருணைப் பக்தி நன்கு வேர்விட்டு வளர்ந்திருந்ததாகத் தாம் எழுதிய "தேவநற்கருணை தெய்வீக விருந்து" என்னும் நூலிற் குறிப்பிட்டுள்ளார். புனித

அந்தோனியாரின் ஏழாம் நூற்றாண்டு நினைவாக 1923 இல் வெளிவந்த ஊர்காவற்றுறை அந்தோனியார் கோவில் வரலாறு என்னும் நூலில் சுவாமியவர்கள் பின்வருமாறு எழுதியுள்ளார் "...... 1903ம் ஆண்டு ஒரு பணச்சடங்கு வைத்து ஒரு தொகைப் பணம் சேர்த்துத் தமிழிலுள்ள சகல புத்தகங்களிலும் ஒவ்வொரு பிரதி வாங்கினோம். இவைகளை ஒழுங்கு வைத்துக் கொண்டு வாசிக்க விரும்புவோருக்கு புத்தகங்களை இரவல் கொடுத்து வந்தோம். இலங்கையின் வடபாகத்தில் வேறு எங்கேயாவது நடைபெறுமுன் இக்கோவிலிலேயே இரவல் கொடுக்கும் புத்தக சாலை நடைபெறத் தொடங்கிற்று என்று எண்ணுகிறேன்."

மக்களுக்கு அறிவூட்ட நூலகம் எத்தனை முக்கியமானது என்பதை அடிகளார் நன்குணர்ந்து செயல்பட்டார் என்பதை இன்று நினைக்கையில் அவரின் தீர்க்கதரிசன பார்வை புரிகிறதல்லவா?

## 3) நல்லூர்

1905ம் ஆண்டில் நல்லூர் புனித ஆசிர்வாதப்பர் ஆலயத்திலிருந்து தனது வேத போதக பணியில் புது உத்வேகத்துடன் ஈடுபட்டார். கல்லியங்காட்டில் ஆடியபாத வீதியில் புனித சவேரியார் ஆலயத்தை, குருமனையுடன் அமைத்தார் புது வேத போதகரான புனித சவேரியாரின் உத்வேகத்துடன் 42 ஆண்டுகள் இங்கிருந்து கொண்டே இறைபணி புரிந்தார் "இறையுணர்வும் தமிழுணர்வும் தம்மிரு விழிகள்." என்பதை நல்லூர் தலைப் பணிமனையிலிருந்து கொண்டே பார் எங்கும் பரவப் பணியாற்றினார்.

## பயணப்பாதையில்

அன்பர் யேசுவின் அன்புமொழிகளை, அவர்காட்டிய வழியை மக்கள் மனங்களில் விதைக்க புனித சின்னப்பர்

புனித சவேரியார் போன்று பல பயணங்களை மேற் கொண்டார். பயணம் ஒன்று செய்யும் முன்தான் செல்ல விருக்கும் புதுக்கிராமத்துக்குத் தான் துணையாளரை (உப தேசியார்) அனுப்புவார் அவர்மூலம் அக்கிராமத்தின் நெழிவு சுழிவுகளை அறிந்து கொள்வார் அதன்பின் படிப்படியாக நிதானமாகத் தன் நகர்வுகளைச் செல்வார். அவ்வூர் மக் களின் நாடித்துடிப்பை நன்கறிந்து தம்பணிக்கு அவர்களை இசைவாக்கம் பெறவைத்துவிடுவார். இறைபணிக்கு மக் களை ஆயத்தப்படுத்தும் வேளையில் கைதட்டிப் பாட்டுப் பாடி, கூச்சல்போட்டு போதனையைக் குழப்ப ஒரு கூட் டம் வரும். தண்ணீர் குடிக்கும் கிணற்றில் பாம்போ, பூனையோ போட்டு வட்டச் சிலர் முனைவர். புதுக்கிறிஸ் தவர்களை வழிமறித்து அடித்து விரட்ட அடியாட்கள் வருவர். அம்மக்களின் பயிர்களை ஒரு கும்பல் அழிக்கும். கள்ள வழக்குப் போட்டுக் கலங்கடிக்கப்பட ஊர் பெருந் தலை வரும். இத்தனை இடர்களையும் இறைவல்லமை யோடு எதிர்கொண்டு வெற்றி கண்டார் சுவாமி ஞானப் பிரகாசர். ''கிழக்கிலும் மேற்கிலுமிருந்து பலர் வந்து விண்ணரசில் ஆபிரகாம், ஈசாக்கு யாக்கோபுடன் பந்தி அமர்வார்கள்'' (மத் 8:11) என்பதை அடிகளார் நிதர்சன மாக்கினார். உரும்பிராய், நீர்வேலி, யூலனூர், புன்னா லைக்கட்டுவன், மல்வம், மடத்தடி, தேவர்கட்டு மூளாய், முலவை அல்லாரை, மட்டுவில் முகமாலை முள்ளியவளை ஆகிய, இடங்களிலிருந்து விண்ணரசுக்கு அடிமைப்பட்டு, இருந்த மக்களை, அழைத்து வந்தார். சாதிக் கொடுமைக்கு சாவு மணி அடித்தார். யேசுவின் சிலுவைக்கொடியேந்தி உண்மை விடுதலையின் மகிழ்ச்சியை அம்மக்களுக்குக் கொடுத்தார்.

விசுவாச உறுதி

இயேசுவின் அன்பரசில் அடியூன்றி, உறுதியாக வாழப் படிமுறைத்திட்டங்களைத் தீட்டிச் செயற்படுத்தினார்.

1. தேவதாயின் ஆளுமையின் ஆழ்ந்த சக்தியினைச் செப மாலைத்தியானத்தின் காரணிக்கங்கள் (மறையுண்மைகள்) மூலம் ஊட்டினார்.

2. இறைப்பற்றினை இறுகப்பற்றிக்கொள்ளப் பக்தி நூல்களை ஆக்கினார். மோட்சபாதை, இலத்தின் இசையொட்டிய பாடல்கள், திசைவிருத்தங்கள், தேவாரங்கள், புனிதர்கள் தொடர்பான தென்மோடி நாடகங்கள், தர்க்கப்பிரசங்கள் போன்றவற்றினூடாக மக்களை விசுவாசத்தில் உறுதியாக இருக்கச் செய்தார்.

. ஆலயங்கள் நிறுவினார். பெரும்பாலான ஆலயங்களுக் கருகே பாடசாலை அமைத்தார். அங்கு கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு இறைபணியில் தம் குருவோடு இணைந்து பணியாற்றப் பணித்தார். விசுவாசத்தில் நன்கு வேர்விட்டுத், தலைநிமிர்ந்து நற்செய்திக்குச் சாட்சி பகரும் மக்களாக அம்மக்களை மாற்றினார்.

## பச்சாத்தாப அருட்சாதனம்

பச்சாத்தாப அருட்சாதனத்தின் அருமை பெருமைகளை அம்மக்களுக்கு நன்குணர்த்த வீடு வீடாகச் சென்று மக்களை அழைக்க, அழைப்புச் சீட்டுக்களைத் தம் உதவியாளர்மூலம் அனுப்புவார். உதவியாளர் மக்களுக்கு அருட்சாதனத்தினைப் பெற்றுக் கொள்ளும் ஆயத்த முறைகளை விளக்குவர். அருட்சாதனம்பெற்ற மக்கள் ஆன்மபலம் பெற்று ஆண்டவரில் ஊன்றி நின்றனர்.

## ஞானவீரன்

இறையரசுக்கு ஆட்களைச் சேர்க்கப் புறப்பட்டவர்களுக்குச் சில ஊர்களில் எதிர்ப்புக்கள் மிகப்பலமாக இருந்தன. புனித சின்னப்பரின் அடிச்சுவட்டில் அஞ்சாது அடி எடுத்து வைத்தார்.

சில ஊர்களில் அவர்கட்டிய ஆலயங்கள் எரிக்கப் பட்டன. நிலங்கள் உழப்பட்டன. ஓர் ஊரில், பயணப் பாதையில் காருக்குக் கல்லெறி விழுந்தது. கண்ணாடிகள் நொருங்கின. சிதறிய கண்ணாடித் துண்டுகள் காரிலிருந்த சுவாமிகளின் பிடரியைப் பிய்த்துச் சென்றது. இக் காட்சியை அன்று நான் கண்ணாரக் கண்டேன். அக்காட்சி இன்றும் என் நெஞ்சில் நிற்கிறது. இன்றும் அதை நினைத்தால் நெஞ்சு கனக்கிறது. கண்களில் நீர் சுரக்கிறது. இன்னும் ஓர் இடத்தில் கார் வரும் பாதையில் அகழி வெட்டி ஆளை முடிக்கமுனைந்தனர். இறையருளால் அவர் காப்பாற்றப்பட்டார். சாதி, சமயத்தின் பெயரால் நடைபெற்ற அடக்கு முறைகளுக்கு எதிராக யேசுவின் துணையோடு முகம் கொடுத்தார். தீண்டாமை என்ற கொடிய அரக்கன் மக்கள் சிலரை நல்ல உடை உடுத்த விடாது தடுத்தான். பாதரட்சை அணிய அனுமதி மறுத்தான். இன்னும் சொல்லமுடியாத பெரும்கொடு வினைகளை அவன் செய்தான். அடிகளார் இவ்வரக்கனின் ஆட்சியை இறைவல்லமை கொண்டு அகற்றிவிட்டார். அதனால் விடுதலை பெற்றவர் விண்ணரசில் இணைந்தனர். அவர்கள் விசுவாசத்தின் சாட்சிகளாக மாறினர்.

## சமாதானப் புறா

உண்மையான ஞானவீரன் உண்மையான சமாதானப் புறாத்தான் என்பதைச் சுவாமிகள் தம் வாழ்வில் காட்டி நின்றார். ''உலகம் தரும் சமாதானம் போலன்று எனது சமாதானம்'' என்பதை இறைமகன் யேசுவின் சிலுவை வழியிலே மெய்ப்பித்தார். அறியாமையால், பாமரத்தன்மையால் சமாதானத்தை இழந்து, அல்லற்பட்ட மக்களுக்குச் சாந்தியின் கருவியாக, சமாதானக் காப்பரணாக அடிகளார் விளங்கினார்.

உள்ளத்தை உள்ளபடி உரைக்கும் அடிகளார் பகைமை பல தேடிக்கொண்டாலும், எதிரியையும் நேசிக்கும் பக்கு

வம் பெற்றிருந்தார். புரிந்துணர்வுடன் இன்னல்கள் புரிவோரை அணுகினார்.

கிராமங்களில் நடைபெறும் ஆலயத் திருவிழாக்கள், நாடகங்கள் போன்றவற்றைத் தானே முன்னின்று எதிர்த்து நிற்போரையும் தம்பக்கம் ஈர்க்கும் வண்ணம் நடந்து கொள்வார். தம்முடன் பணியாற்றிய துணைக்குருக்களையும் தம்வழியிலே நன்கு நெறிப்படுத்தியிருந்தார்.

சுவாமிகளின் ஆளுமை சகலரையும் ஆட்கொள்ளத் தவறவில்லை. அதனால் அவருக்குப் பல சிறப்புப் பெயர்கள் காலவோட்டத்தில் சூட்டப்பட்டன. அவரின் அன்பு நெஞ்சங்கள் அவரை அன்று பெரிய சுவாமி என்று நன்றி ததும்ப, முகம்மலரக் கூறுவார்கள்.

**பிரசங்கச் சிங்கம்**

சுவாமி ஞானப்பிரகாசர் மக்களால் பிரசங்கச் சிங்கம் என அழைக்கப்பட்டார். அவர் தாம் கட்டிய ஆலயங்களில் மட்டுமல்ல, புகழ்பெற்ற யாத்திரைத் தலங்கள், மற்றும் கோவில்களிலும் பிரசங்கம் செய்யச் செல்வார். யாத்திரைத்தலங்களில் அவரின் தர்க்கப் பிரசங்க உத்தி மக்கள் மனதில் பெரும் மாற்றத்தைக்கொண்டு வந்தன. யாத்திரைத் தல விடுதிகளில் அவரின் பிரசங்கம் பற்றியே மக்கள் தங்களுக்குள் பேசிக்கொள்வார்கள். அடிகளாரின் பிரசங்க உத்தி இடத்துக்கிடம் மாறுபடும்.

கற்றறிந்த கூட்டத்துக்குக் கருத்தாழமிக்க பல எடுத்துக் காட்டுகளுடன் பிரசங்கிப்பார். பாமர மக்கள் கூட்டத்திற்குப் பால பாடப் பிரசங்கம் செய்வார். புதுக் கிறிஸ்தவ குழுவுக்கு விசுவாச உண்மைகளின் வித்துக்கள் நன்கு வேர் ஊன்றக்கூடிய வகையில் நற்புத்திகள் நிறைந்த பிரசங்கம் செய்வார். ஞானொடுக்க காலத்தில், உள்ளாய்வு உத்திகள் மூலம் சொல்லம்புகளாற்கறைபடிந்த இதயத்தைச் சுத்திகரிக்கச் செய்து விடுவார்.

அல்லல் உற்று, மனப்பாரத்தால் நொந்து வெந்து வரும் உள்ளங்களின் நோக்காட்டை வார்த்தைகளால் வருடி சுகம் அளிப்பார். சுவாமியார் பிரசங்கம் செய்யாத ஊரே இல்லை. அவரின் குரல் இலங்கையில் மட்டுமன்று தென்னிந்தியாவிலும் ஒலித்தது.

## நவநாள்

1932 பங்குனி 4ம் நாள் தொடக்கம் புனித சவேரியார் வரப்பிரசாத நவநாள் வழிபாட்டை வருடம் தோறும் நடத்தினார். அவ்வேளைகளில் யாழ்நகரில் பிரதான ஆலயங்களிலிருந்து மக்கள் வந்து இந்நவநாளில் பங்குபற்றுவர். கொழும்புத்துறை ஆசிரிய கலாசாலை மாணவர், சம்பத்திரியார் கல்லூரி மாணவர், குருமட மாணவர், தத்தம் வழிபாட்டில் கலந்து கொள்வர். இந்நாள், கலந்து கொள்ளும் மக்களுக்கு ஆன்மீகச் சக்தியைக் கொடுக்கும் வகையில் அடிகளாரின் வழிபாட்டுப் பிரசங்கம் அமையும் வரப்பிரசாத நாளை வரமிக்க நாளாக்கிட வரப்பிரசாத நவநாள் என்ற சிறு செபப் புத்தகத்தையும் வருவோர் கையில் அளிப்பார்.

## செப வல்லமை

உடல் உள உழைப்பின் பழுவால் நவநாள் முடிந்த சில நாட்களில் கடும் சுகமீனமுற்றார், மரணத்தின் வாயிலை நெருங்கிவிட்டார் என்றே நினைக்கும் அளவு நோய் பலம் பெற்றிருந்தது. இவ்வேளை வந்தனைக்குரிய கியோமர் ஆண்டகை துண்டுப்பிரசுரங்கள் பத்திரிகைகள் மூலம் சுவாமியார் சுகமடையச் செபிக்கும்படி மக்களை வேண்டிக்கொண்டார் நாளும் பொழுதும் மக்கள் கண்ணீர் மல்க தம்வழிகாட்டி, வாழ்வழித்த வள்ளல், தம் வாழ்வின் விடிவெள்ளி பிரகாசிக்கச் செபித்தார்கள் 50 நாட்கள் கடின வருத்தமுற்றிருந்த முனிவர் முற்றும் முழுதாகச் சுகம் பெற்றார். அவரின் அற்புத சுகத்தைப் பற்றி அவ

ரைப்பராமரித்த மானிப்பாய் வைத்திய அதிபர் வியந்து கூறினார். (17-3-1936). அவர் ''இறைவன் எனது நாட்களை மேலும் அதிகரித்திருக்கிறார். மானிப்பாயில் ஒரு நோயில் அடியிட்ட பின்புதான் எனக்கு அழைப்பு வரும்,'' என்று கண்ணீர் விட்டுக் கொண்டிருந்த திரு பொன்னையாவிடம் சிரித்தபடி கூறினார். மக்களின் மனமுருகிய மன்றாட்டுக்களை இறைவன் நிச்சயம் கேட்பார். செப சக்திக்கு ஈடாக உலகின் ஒரு சக்தியுண்டா என்றார்.

## மாபெரும் எழுத்தாளன் சமய நூல்கள்

புரியாத மொழியில் திருப்பலி நடந்த காலம் அது சுதேச மக்களின் ஆன்மீக தாகத்தை உணர்ந்த அடிகளார் ''எனது பூசைப்புத்தகம்,'' என்ற நூலை இலத்தின் மொழியிலிருந்து தமிழில் மொழிபெயர்த்தார்.

மக்களின் விசுவாச வாழ்வைச் செழிப்பாக்க உறுதிப்படுத்த அவர் அளித்த நூல்கள் பல.

1) செப நூல்கள் 2) சமய அனுசார நூல்கள்
3) பதிப்பித்த நூல்கள் 4) பிரசங்க நூல்கள்
5) சமய வரலாற்று நூல்கள் என அவற்றை வகைப்படுத்துவர் அறிஞர்.

## துண்டுப் புத்தகங்கள்

சமய வேறுபாடின்றி வாசித்து, வாழ்வை வளமாக்கிக் கொள்ளக் கூடிய சிறிய நூல்கள் 22-ஆகும். இவற்றின் சிற்றெல்லை 24 பக்கம். விரித்த பேரெல்லை 60பக்கம் ஆகும்.

## மொழி பெயர்ப்பு நூல்கள்

எனது பூசைப்புத்தகம்; ஆண்டவர் சரித்திரம், சாங்கோபாங்க சுவாமிகள் லூர்த்தில் நடக்கும் அதிசயங்கள்.

**வரலாற்று ஆராய்ச்சி நூல்கள்**

தமிழரின் பூர்வசரித்திரமும் சமயமும்
தமிழரின் ஆதி இருப்பிடமும் பழம் சீர்திருத்தமும்,

**யாழ்ப்பாண வரலாறு**

வையா வசனம் யாழ்ப்பாண வைபவ விமரிசனம் ஆங்கில மொழியில் பல நூல்கல் எழுதியுள்ளார்.

தருக்க சாந்திர சுருக்கம்
தமிழ் அமைப்புற்ற வரலாறு
சொற்பிறப்பு ஒப்பியல் அகராதி
அச்சேறாத அரிய நூல் பல உண்டு.

மாபெரும் எழுத்தாளன் தேவதாயில் கொண்ட அளப்பரிய பக்தியால் தேவதாய் பற்றி எழுதியவை பல. இசை ஞானம் மிக்க அடிகளார் தேவதாய் பற்றி இயற்றிய இலத்தின் இசையொட்டி ஆக்கிய கீதங்கள்.

மாதாவே துணை நீரே, வாழ்த்துவோம் மாதாவை இவை இன்னும் மக்களால் விரும்பிப் பாடப்படும் பாடல்களாக உள்ளன. பாலன் பேரில் மதுரமான யேசுவே, மனமே மனமே பரலோகமே நினை. சூசையப்பர் பேரில் பாவாலும் பூவாலும் சூசை நாதாவைப் புகழ்வோம் பாடல்களும் அவர் ஆக்கிய பாடல்களே.

**விடி வெள்ளி**

சுவாமி அவர்கள் மானிடத்திற்கு மாபரன் யேசுவின் அன்புப்பாதையைக் காட்டத் தோன்றிய விடிவெள்ளி, தீண்டாமை உலகின் அழுக்ககற்றி, இருள்போக்கிய விடிவெள்ளி தமிழ் மொழியின் தொன்மை செம்மையைப் பாரெங்கும் பளிச்சிடச் செய்த விடிவெள்ளி.

## மண்ணில் வழிகாட்டி விண்ணின் விடிவெள்ளி

1947 தை ஆறாம் நாள் மூவரசர் திருநாட்பலியை மானிப்பாய் புனித அந்தோனியார் கோயிலில் நிறைவேற்றும் வேளை! அனுபவிப்பு முடிவுறும் நேரம் அடிகளார் சற்று ஆடினார். மயக்கமுற்றுச் சரிய சந்தியாப்பிள்ளை உபதேசியார் ஓடி வந்து தாங்கினார். மற்றவர் உதவியுடன் படுக்கை நாற்காலியில் பத்திரமாகப் படுக்கவைத்தார்கள். அடிகளாரின் திருப்பலி உடைகள் மாற்றப்பட்டு மானிப்பாய் கிறீன் மருத்துவமனையில் உடனடியாக சேர்க்கப்கப்பட்டார். 22-1-1947 காலை 10. 40 மணியளவில் அவர் உயிர் அவரை விட்டுப் பிரிந்தது. அப்பொழுது சரித்திரம் அறியாத சனத்திரள் கதறி அழும் மக்கள் கூட்டம்.

இன்று மாமனிதன் உடல் மண்ணுடன் மண்ணாகி 50 ஆண்டுகள் ஆகிவிட்டன. ஆனாலும் அவர் கட்டிய உருவங்கள் உருமாறலாம், இல்லாமலும் போகலாம். ஆனால் அவர் காட்டிய, கட்டிய அன்பரசு நித்தியம் நிலைத்திருக்கும், விண் இருக்கும்வரை விடி வெள்ளியும்இருக்கும். அது எப்போதும் வழிகாட்டி நிற்கும்.

# நன்றிகள்

விடிவெள்ளி வெளியாக அனுமதித்த யாழ் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்கட்கும் யாழ். மறைவட்ட கர்மாதிகாரி அருட்திரு I.P.E செல்வராஜா அடிகளாருக்கும் நூல் உருவாக ஊக்குவித்த அருட்திரு ஜெயசீலன் அடிகளாருக்கும் அச்சேற்ற ஒழுங்குபடுத்தித்தந்த ஆசிரியர் பிலிப் நேரி அவர்கட்கும் என்றும் என் இதய நன்றிகள்.

நூல் வெளியிடுவதற்கு உதவும் கரங்களாக இருந்து உதவிய அன்பு இதயங்கட்கும், அழகுற அச்சேற்றி தந்த மணி ஓசை அச்சக உரிமையாளர் யோசப்பாலாவிற்கும் என் நன்றிகள்.